1975 மார்ச் 14]

திரு. இரா. இராமலிங்கம்: இந்த வருமான அடிப்படையில் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆஸ்பத்திரியில், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இருந்தால், அவர்களுக்கு கட்டணம் வசூலிக்கிறார்கள். அதைத் தவிர்க்க, தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லா விதமான இலவச மருத்துவ வசதிகளும் கிடைக்குமாறு மத்திய அரசுக்கு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தொழிலாளர்கள் குடும்பத்திற்கு வைத்திய வசதி பெற மருத்துவ மனைகள் மக்கள் நல்வாழ்வுத் துறையில் கட்டப்பட்டிருக்கிறது. இது தொழிலாளிகளுக்கு தனியாக கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனை. மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த உச்ச வரம்பை ஆயிரம் ரூபாய் என்று ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தை பல இடங்களில் தெரிவித்திருக்கிறார்கள். இதை விரைவில் சட்டப்பூர்வமாக செய்யவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம்: மத்திய அமைச்சர் ரூபாய் 500-லிருந்து ஆயிரம் ரூபாய் உயர்த்துவதற்கு கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது குறித்து. . . . .

MR. DEPUTY SPEAKER: This is a question of policy matter. . .

திரு. எ. சுப்பிரமணியம்: இது பாலிசிமேட்டர் இல்லை, தவறான பதில்களுக்கு சில விளக்கம் பெற வேண்டும் என்பதுதான்.

MR. DEPUTY SPEAKER: When the Minister gives false information, according to the hon. Member, he can raise a point of privilege. He is not the spokesman of the Central Government here. I am not allowing him to speak. . . .

பொள்ளாச்சி சரகத்தில் தேக்கு மரங்கள்.

*322 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வன சரகத்தைச் சேர்ந்த "டாப்சிலிப்" என்ற பகுதி அரசாங்க காட்டில் உள்ள தேக்கு மரங்கள் எவையேனும் 1973 டிசம்பர் மாதத்தில் களவு போயினவா?

(இ) ஆம் எனில், எவ்வளவு மதிப்புள்ள தேக்கு மரங்கள் களவு போய் உள்ளன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) களவு போன மரங்களின் மொத்த மதிப்பு ரூ. 68,446.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: வன பாதுகாப்புக்காக அதிகாரிகள் இருக்கிறார்கள். இது எப்படி களவு போனது, களவாடியவர் யார், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வனத்துறை அதிகாரி சோதனை செய்கின்றபோது இதைக் கண்டு பிடித்தார்கள். அதையொட்டி 8—12—73 அன்று மாவட்ட வன அதிகாரி அவர்கள் பார்வையிட்டார்கள். அதைத் தொடர்ந்து 7—1—1974 அன்று சீஃப் கன்சர்வேட்டர் ஆப் பாரெஸ்ட்ஸ் அவர்கள் பார்வையிட்டார்கள். இதைத் தொடர்ந்து ஒரு ரேஞ்சரும் ஒரு பாரஸ்டரும் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளார்கள். ரூ. 68 ஆயிரம் மதிப்புள்ள மரத்திற்கு ரூ. 71 ஆயிரம் இந்த காண்டிராக்டர்களிடம் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தேக்கு மரங்கள் மட்டுமல்ல, மாநிலத்தில் எல்லாக் காடுகளிலும் பரவலாக தேக்கு மரம், சந்தன மரம் போன்றவை களெல்லாம் திருடு போவதாகவும், இதிலே ஒரு சில அதிகாரிகள் கூட இந்த திருட்டுக்களுக்கு உடந்தையாக இருப்பதாகவும், இதில் ஒரு இண்டர் ஸ்டேட் காங்க் வேலை செய்வதாகவும் சொல்லப்படுகிறது. பல கோடிக் கணக்கான ரூபாய் அளவுக்கு மாநிலம் முழுவதும் தொடர்ந்தாற்போல் திருடு போய்க் கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு திட்டமிட்டு அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாநில அளவில் ஒரு காங்க் வேலை செய்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் தகவல் தர வேண்டும். இதுபோன்ற திருட்டுக்களை கண்காணிப்பதற்கு ஸ்பெஷல் மொபைல் பார்ட்டி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய வாகன வசதிகள் இருக்கிறது. அவர்கள் மூலமாக பல திருட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு, சில உடந்தையாக இருந்த அதிகாரிகளுக்கு தண்டனை கொடுக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தடவை 2 பேர் தற்காலிக மாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. அரங்கநாயகம் : இந்தத் திருட்டு பற்றி போலீஸ் வழக்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்த காண்டிராக்டர்களிடம் 71 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை சட்டப்படி அந்தப் பகுதிகளில் எல்லாம் எடுத்தவர்கள் எல்லாம், அடுத்து 2 பர்லாங் தூரத்தில் யார் வெட்டியிருந்தாலும் அவர்கள் தான் அதற்கு பொறுப் பாளராகும். அந்தச் சட்டப்படி அவர்களிடமிருந்து 71 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ரேஞ்சு ஆபீசர்கள் பொறுப் பானவர்கள் என்பதால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : இரவு 12 மணிக்கு அவர்கள் வெட்டச் சொல்லுவதாகவும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள் திருடு போவதாகவும், பிறகு 2 பேர் சஸ்பெண்டு என்று சொன்னால் அவர்கள் 5 லட்சம், 10 லட்சம் சம்பாதித்துக் கொண்டு விடுகிறார்கள். ஆகவே, சஸ்பெண்டு செய்வதால் பிரயோஜனம் இல்லை. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்கள் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

1975 மார்ச்சு 14]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்த வழக்கை பொறுத்த வரையில் இழப்புக்கு மேல் அபராதம் வசூல் செய்யப்பட்டது. உடனடியாக சட்டப்படி அவர்களை வேலையிலிருந்து டிஸ்மிஸ் பண்ண வேண்டும். முதல் கட்டமாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தத் தேக்கு மரத் திருட்டிலே இதற்காக ரூ. 71,000 வசூலிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இம்மாதிரி மரங்கள் திருட்டுப் போகும்போது அதற்கு என்ன மதிப்பாகிறது என்று கணக்கிட்டு அந்தப் பணத்தை வசூலிப்பதால் மட்டுமே மேற்கொண்டு திருட்டு நடக்காமல் தடுக்கப்படுமா? அந்த நபர்களை கிரிமினல் வழக்கில் பதிவு செய்து ஜெயிலில் அடைப்பதின் மூலமாகத்தானே மரங்களுக்கு இன்னும் அதிகமாக பாதுகாப்பைக் கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, கிரிமினல் வழக்குச் சட்டப்படி போடக்கூடிய வழக்குகளுக்குப் போடலாம்.

நீலகிரி மலையிலுள்ள மரங்கள்.

* 323 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மலையிலிருந்து கேரளாவில் அமைந்துள்ள பிர்லாவுக்குச் சொந்தமான செயற்கை பட்டு தொழிற்சாலைக்கு மரங்களை வெட்டிக் கொண்டு போக அனுமதி தரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். மேட்டுப்பாளையத்தில் ஆயிரக்கணக்கான டன்கள் நீலகிரி மலையிலிருந்து வெட்டப்பட்ட மரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை பார்க்கலாம். தொடர்ந்து கேரளாவுக்குச் செல்கிறது என்பதை இன்றைக்குப் போனாலும் பார்க்கலாம். போன சட்ட மன்ற கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பழனியப்பன் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்வதை விட ஆராய்ந்து பார்த்து, தமிழ் நாட்டு மரங்கள் கேரளாவுக்குச் செல்வதை, பிர்லா கம்பெனிக்குச் செல்வதைத் தடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.